முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 5 | 10—4—59 | வெள்ளி | ஒலை: 46

காந்தி சிலை திறப்புவிழா!



நடக்கின்ற பாவனையில் செதுக்கிட்ட சிலையொன்றைக் கடற்கரையில் திறக்கின்றார் நேரு துரை!

காந்…

நடக்கின்றார்—நடக்கின்றார்—கடும்பலி அட…களைக் காண சகிக்காமல் நடக்கின்…!

மனிதனின் கதை

பி.சி. கணேசன்

32. பிரிட்டனை உருவாக்கிய பேரரசர்கள்

அன்புள்ள மாதவி,

கடலாதிக்கம் வெகுகாலம் வரையிலும் கிரேக்கர்களிடமும் ரோமானியர்களிடமும் தமிழர்களிடமுமே இருந்து வந்தது. நிலத்தில் மட்டுமல்ல, நிலத்திரைக் கடலிலும் ஆதிக்கம் பெற்றால்தான் உலகில் செல்வாக்குடன் விளங்க முடியும் என்ற உண்மையைக் கண்டறிந்து, கடல் பலத்தை வளர்த்து வலுப்படுத்திக் கொண்ட தேசம் பிரிட்டன். கடலாதிக்கத்தில் கவனம் செலுத்தாததால் கிரேக்கம் வீழ்ந்தது; ரோம் பல போர்களை இழந்து பலம் குன்றியது; இத்தரணியாண்ட தமிழகம் தன் மண்ணை மாற்றானுக்குத் தானம் செய்யும் நிலை பெற்றது!

பரப்பளவு மிகச் சிறியதானாலும் பாராளும் ஆற்றலைப் பல நூற்றாண்டுகள்வரை தன் கையில் பிரிட்டன் வைத்திருந்ததற்குக் காரணம் அதன் கப்பல் படையே! 'ஆர்ப்பரிக்கும் அலைகளை ஆளும் வல்லமை பெற்றவர்கள் நாங்களே' என அந்நாட்டுக் கவிஞர்கள் பாக்கள் புனைந்து நாட்டுப் பற்றுடன் கடல்பற்றைப் பெரிதும் வளர்த்தனர். கடல்வேட்கை பிரிட்டானியர்களுக்கு இருப்பதைப்போல் வேறெவருக்குமே இல்லை யென்று உறுதியாகக் கூறலாம்.

ஒன்பதாம் நூற்றாண்டில்தான் பிரிட்டிஷ் கப்பற் படையின் கரு உருக்கொண்டது. அதை உருவாக்கிய பெருமை பிரிட்டனின் பேரரசன் மகா ஆல்ஃபிரெட்டையே சாரும்.

வரலாற்றில் 'மகா' (The Great) என்ற அடைமொழியிட்டு அழைக்கப்படுகின்ற மன்னர்கள் வெகு சிலரே! அவர்களில் பெரும்பாலோர் அப்பட்டம் பெறக் காரணமாயிருந்தது எது? போர்கள் — வெற்றிகள்! அனாதைகள் ஆலாபனம் பாட, விதவைகளின் கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்து ஓட, கல்லறைகள் சோக வரலாற்றைக் கதை கதையாகச் சொல்ல, பிணவாடையின் மத்தியில், அழிந்த நகரங்களின் சாம்பல் மேட்டின் மேல் நின்றுகொண்டு, அவனியை அலட்சியமாக நோக்கிய மன்னர்களுக்கு— தளபதிகளுக்கு —வரலாறு சூட்டிய பட்டம் 'மகா' என்பது! ஏழையின் கண்ணீரைத் துடைத்து, எளியவர்களின் துயர் போக்கி, என் கடன் பணி செய்து கிடைப்பதே என மக்களின் நலனில் மாறாத அக்கறை காட்டியதால் 'மகா' என்ற சிறப்புப் பெற்ற மன்னர்களும் ஒரு சிலர் உண்டு. அவர்களில் ஒருவன் ஆல்ஃபிரெட். (Alfred)

இங்கிலாந்தின் ஒரு பகுதியில் சாக்சோனியர்களின் மன்னனாக கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆட்சி செய்தவன் ஆல்ஃபிரெட். அப்பொழுது, வெளிநாட்டவர்களான டேன்களின் (Danes) படையெடுப்பால் இங்கிலாந்து சீரழிந்து கொண்டிருந்தது. அவர்களின் படையெடுப்பிலிருந்து நாட்டை மீட்டு, நிலையான ஒரு ஆட்சியை ஆல்ஃபிரெட் நிறுவினான். இளமையிலிருந்தே தன் மூத்த சகோதரனை எதல்ரெட் (Aethelred) டுடன் துணையாகப் போருக்குச் சென்று களம் பல கண்டவனாதலால், பட்டத்துக்கு வந்தவுடன் போர்புரிவது அவனுக்கு சாதாரண விஷயமாகப் போய்விட்டது. டேன்களை வென்று நாட்டைமீட்டான். மீண்டும் அவர்கள் படையெடுத்துத் தொல்லை தராமல் இருக்க, கப்பற் படையை ஒழுங்கு படுத்திப் பலப்படுத்துவதில் கவனம் செலுத்தினான். இச்செயலால் 'பிரிட்டிஷ் கப்பற் படையின் தந்தை' என்று இவனை அழைப்பதும் உண்டு. வென்ற டேன்களைக் கிறித்தவ மதத்தைத் தழுவும்படியாகச் செய்தான்.

கி. பி. 855-ல் இங்கிலாந்தில் ஆல்பிரெட் முழு ஆதிக்கம் பெற்றான். கான்டர்பரி ஆர்ச்பிஷப்பான பிலிக்மன்ட் (Plegmund), ஊர்செஸ்டர் பிஷப்பான வெர்ஃபர்த் (Werferth) ஆகியோர் ஆல்ஃபிரெட்டின் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள் என்பதிலிருந்து, அவனுடைய மதவுணர்வும் தெய்வ நம்பிக்கையும் நன்கு விளங்கும். அஸ்ஸர் (Asser) என்ற ஒரு பிஷப்தான் ஆல்ஃபிரெட்டின்வாழ்க்கை வரலாற்றை நூலாக எழுதி வெளியிட்டார்.

ஆல்ஃபிரெட் பல துறைகளிலும் மேதையாக விளங்கினான். வீரமும் விவேகமும் அவனிடத்தில் இணைந்து வாழ்ந்தன.

ஆல்ஃபிரெட் ஒரு சிறந்த தளபதி — டேன்களைத் தோற்கடித்தான்; கப்பற்படை நிறுவினான்.

ஆல்ஃபிரெட் ஒரு பேரரசன்— இங்கிலாந்தை ஒரு குடைக்கீழ்க் கொண்டு வந்தான். டேன்கள் என்ற கொள்ளைக்காரர்களால் அமைதியிழந்த நாட்டில் அமைதியை உண்டாக்கி, சட்டத்தை அமுல் செய்தான்.

ஆல்ஃபிரெட் ஒரு கல்விமான் —பல மத நூல்களையும் சரித்திர நூல்களையும் ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தான். அவனுடைய மொழிபெயர்ப்பு நூல்கள்தான் ஆங்கில உரை நடையில் தோன்றிய முதல் நூல்களாகும்.

ஆல்பிரெட் ஒரு உண்மைக் கிறித்தவன்—மதக் கோட்பாடுகளின்படி தான் வாழ்ந்தது மட்டுமின்றி, தன் நாட்டு மக்களும் வாழ வேண்டுமென்ற எண்ணத்தில் மடாலயங்கள் கட்டினான்; ஆலயங்கள் கட்டினான். தன் சொந்த சொத்தின் பெரும் பகுதியைத் தர்ம காரியங்களுக்குக் காணிக்கையாக வழங்கினான்.

வாளின் வலிமைக்காக மட்டுமல்ல; மன்னனுக்கிருக்க வேண்டிய மாண்பனைத்தும் ஒருங்கே பெற்றிருந்ததற்காக 'மகா ஆல்ஃபிரெட்' என்று அவனை அழைப்பது முற்றிலும் பொருந்தும்.

இந்தியாவின் ராஜரிஷி அசோகன்!

ஆங்கில நாட்டின் ராஜரிஷி ஆல்ஃபிரெட்!

ஆல்ஃபிரெட் வாழ்ந்தஇரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர், வெற்றி வீரன் என வரலாற்றில் அழைக்கப்படும் வில்லியம்தான், பிரிட்டனுக்கு தேசம் — நாடு — என்ற அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்தவன்,

1066—ஆங்கில நாட்டு வரலாற்றில் குறிப்பிடத் தக்க ஆண்டு! அந்த ஆண்டில்தான் 25,000 போர் வீரர்கள் அடங்கிய பெரும் படையுடன், நார்மண்டிப் பிரபுவான வில்லியம் ஆங்கில மண்ணில் அடி வைத்தான். நார்மண்டி பிரான்சு நாட்டிலுள்ள ஒரு மாநிலம். அப்பொழுது இங்கிலாந்தை ஆண்டு வந்த ஹெரால்டு (Harold) என்ற மன்னனை வில்லியம் தோற்கடித்தான். கிறிஸ்துமஸ் பண்டிகையின்போது வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயத்தில் மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். அவன், ஆட்சிக் கெதிராகக் கலகம் செய்த மக்களை ஈவிரக்கமின்றி தண்டித்து அமைதியை நிலை நாட்டினான்! நிலத்தைப் பிரபுக்களிடையே பங்கிட்டு வழங்கினான். வெவ்வேறு மாகாணங்களில் உள்ள பிரபுக்களிடையே நிலத்தை வழங்கினான். இதனால் அவர்கள் ஒன்று சேர்ந்து வில்லியத்தை எதிர்ப்பதற்கு வழியில்லாமல் போயிற்று. நில விவரங்கள் அடங்கிய ஒரு மாபெரும் தஸ்தாவேஜையும் தயாரிக்கச் செய்தான். இதுதான் பிரசித்தி பெற்ற 'டூம்ஸ்டே' (Doomsday Book) புத்தகம்.

வில்லியம் தன் தந்தையின் சட்டபூர்வமான குழந்தையல்ல. அவன் தந்தையான நார்மண்டிப் பிரபு தோல் பதனிடும் தொழிலாளி ஒருவனின் மகளான ஆர்லெட்டா (Arletta) என்பவளிடம் கள்ளக் காதல் கொண்டிருந்ததன் விளைவாகப் பிறந்த குழந்தையே வில்லியம். ஆகவே நார்மண்டிப் பிரபுவின் மரணத்துக்குப் பிறகு பலத்த போராட்டமொன்றை நடத்தியே, 'வில்லியம் பிரபு' என்ற பட்டத்தை அவன் அடைய முடிந்தது. 'வேசி' மகனாகப் பிறந்து, வசைபுராணத்திடையே வளர்ந்து, திறமையால் பிரபுஎன்ற தகுதி பெற்று, படை பலத்தால் ஆங்கில நாட்டை வென்று, பராக்கிரமத்தால் அந்நாட்டை ஒன்றுபடுத்தி, அறிவாற்றலால் அரசனாக முடிசூட்டிக் கொண்டு, வென்ற நாட்டைச் சொந்த நாடாக்கி வல்லரசாகப் பிற்காலத்தில் திகழ வழிசெய்த வில்லியம் பிரபு ஆங்கில நாட்டு வரலாற்றில் மட்டுமல்ல — உலக வரலாற்றில் — மனிதனின் கதையில் குறிப்பிடப்பட வேண்டியவன்.

மாதவி, மனிதனின் கதையில் இனி இங்கிலாந்து முக்கிய இடம் பெறும். வாணிபம், அரசியல் ஆகிய துறைகளில் மட்டுமல்ல, மனிதனுடைய எண்ணங்களை வளர்த்து இன்றுள்ள நிலையில் உருவாக்கியதில் இங்கிலாந்தின் பங்கு மிகப் பெரியது. அதற்காகவே, அந்நாடு உருவாகி அரசியல் ஸ்திரம் பெற்ற தன்மையை இக்கடிதத்தில் சுருக்கமாக எழுதினேன்.

பிற பின்னர்.

அன்புள்ள,

அகத்தியன்.

யார் இவர்?

★

சரித்திரப் புத்தகத்திலே நாம் காணுகின்ற பிரெஞ்சு நாட்டின் மாவீரன் நெப்போலியனா? அல்ல; அல்ல; உடையில் — உருவில் — அந்த நெப்போலியனையே ஒத்திருக்கும் இவர்தான் மார்லன் பிராண்டோ! 'டெசிரி' என்ற படத்தில் நெப்போலியனின் வேடம் தாங்கி நடித்த அந்தத் திரையுலக தனிப்பெரும் கதாநாயகனைப் பற்றி சுவையான முழுவிபரங்களும் தேவையா?

முத்தாரம் இதழ் 25-ல்

மாறன் எம். ஏ. எழுதும்

'மார்லன் பிராண்டோ' வைப்

படியுங்கள்!

வெள்ளி 10—4—59 சென்னை

உறவு வேண்டாம்!

‘கீழ்த்திசையின் லங்காஷயர்’கள் என்று ஒரு காலத்தில் பெருமையுடன் கொண்டாடப்பட்ட இந்திய நகரங்கள், கைத்தறியாளர்களின் எலும்புக் கூடுகள் சிதறிக் கிடக்கும் சுடுகாடுகளாக மாறின, வெள்ளையரின் பிரவேசத்தால்!

சிப்பாய்க் கலக நேரமது; கான்பூரிலிருந்து அலகாபாத் செல்கின்ற வழியில் தென்பட்ட மரங்களிலெல்லாம் விடுதலை வீரர்களின் பிணங்களைத் தொங்கவிட்டுக் கொண்டு சென்றான், நீல் என்ற வெள்ளைக்காரப் படைத் தளபதி!

ஜாலியன்வாலாபாக்கிலே கை ஓயுமட்டும்—கையிலிருந்த குண்டுகள் தீருமட்டும் பாரதப் புதல்வர்களின் பிணங்களைக் குவித்தார்களாம்; குருதிக் குளத்திலே நீந்திக் களித்தார்களாம், வெள்ளைத்தோல் கொண்ட கறுப்பு உள்ளத்தினர்!

—இவைகளும், இவைகளை நல்லவைகளாக்கும் இன்னும் பல கொடிய சம்பவங்களும், இந்திய விடுதலைப் போரின் சோக வரலாற்றில் நிறைந்து காணப்படுகின்றன.

பழைய நினைவுகளை நெஞ்சத்திலிருந்து அறுத்தெறிந்து விடுகின்ற பண்பு படைத்த நமது சர்க்கார்—வரலாற்று ஏடுகளைப் புழுப்பூச்சிகளுக்கு இரையாக்கிவிடுகின்ற சுதந்திர அரசு — மேற்கண்ட நிகழ்ச்சிகளை மறக்கக் கூடாதல்லவா? அதற்காகத்தானோ என்னவோ; சவக்காட்டுக்கு வழிகாட்டிய அத்தகைய கொடுங்கோலர்களை விழி நிறையக் கண்டு ரசிக்க வீதியெங்கும் அவர்களது சிலைகளை நிறுத்தி வைத்திருக்கிறார்கள்! திரு உருவங்களுக்கு மாலையிட்டு ‘பூஜை’ நடத்தி வருகிறார்கள்!

விடுதலைபெற்ற இந்த நாடு — வெள்ளையனின் பந்தத்தை வெட்டிக் கொண்ட இந்த பாரதம் — ‘காமன்வெல்த்’ என்ற உறவின்கீழ் ஆங்கிலேயருடன் உறவு கொள்வது அவசியம்தானா? எலிசபெத் ராணியாரின் தலைமைக்குத் தலையசைத்திருப்பது தேவைதானா?

“தேசீய இயக்கம் வெற்றி பெற்ற பிறகு வழக்கமாக மாறி, எதிரிகள் மீது மனக் கசப்பு அடைவதுண்டு. பழைய காலச் (அடிமைச்) சுவடுகளும் அழிந்துவிடுவதுண்டு. ஆனால் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் சின்னங்கள் இன்னும் இருப்பது கண்டு வியப்படைகிறேன்...”

— **150** ஆண்டு காலம் வெள்ளையனுக்குப் பல்லக்குத் தூக்கிய பாரதத்தினர், இன்னும் அவன் முன்னால் பல்லிளித்து நிற்கிற கேவலத்தை நாம் இப்படிக் குறிப்பிடவில்லை! ராஜாஜி மண்டபத்திலே புன்முறுவலுடன் தொங்கிக் கொண்டிருக்கிற வெள்ளைக்கார கவர்னர்களின் படங்களைப் பார்த்த ஆட்லிதான் இப்படிக் குறிப்பிட்டார், ஒரு முறை!

அவர் மட்டுமல்ல; பாரதத்தின்மேல் வெள்ளையனின் அழுத்தப்பட்ட பாதம் எடுபடவில்லை என்றுதான் உலகம் கருதுகிறது. சுதந்திரம் என்ற திரையினால் மூடப்பட்ட அடிமைச் சாசனம் இன்னும் அழிக்கப்படவில்லை!

ஏகாதிபத்திய வெறியுணர்ச்சியை இன்னும் மாற்றிக்கொள்ள விரும்பாத வெள்ளை அரசினர், இந்திய சர்க்காரின் கோரிக்கைகள் பலவற்றைக் குப்பையிலே வீசி எறிந்து விட்டிருக்கின்றன—உரிமைகள் பலவற்றை தேம்ஸ் நதியிலே கரைத்துவிட்டிருக்கின்றன.

அவற்றில் ஒன்றுதான் லண்டன் மாநகரத்திலுள்ள இந்திய அலுவலக நூல் நிலையத்தின் உரிமையைப் பற்றியது!

தனக்குத்தான் அந்த நூல் நிலையம் சொந்தம் என்ற உரிமை கொண்டாடி, இந்திய அரசு ஆங்கில அரசுடன் ஆண்டுகள் பலவாக மோதி மோதி மூக்குடைபட்ட வண்ணமே இருக்கிறது!

அந்த மாபெரும் நூலகத்திலே இருக்கின்ற இலட்சக் கணக்கான புத்தகங்களையும் வாங்கியது இந்திய அரசுதான்! அதை நிருமாணித்ததும் இந்திய அரசினரின் தூதுவர்கள்தான்! இந்த நாட்டு மக்களுடைய வரிப் பணம்தான் பெருமைக்குரிய அந்த நூலகத்தின் அஸ்திவாரமாகும்!

—ஆனால் அது தனக்குத்தான் சொந்தம் என்று பல்லாண்டுகளாகக் கூறிவருகிறது ஆங்கில அரசு!

பகற் கொள்ளைக்காரனின் பண்பு நெளியும் இந்தப் பதிலைத்தான் மீண்டும் மீண்டும் அனுப்புகிறது லண்டன்—என்று டெல்லி பாராளுமன்றத்திலே அமைச்சர் ஹுமாயூன் கபீர் வேதனையோடு வெளியிட்டிருக்கிறார்.

பலமுறை கடிதம் எழுதினார்களாம்; பதில் வருவதே அபூர்வமாம்; அப்படியின்றி, கிடைக்கின்ற ஒன்றிரண்டு பதில்களிலும், நூலகத்தின் சொந்தம் பற்றிப் பேச இந்திய சர்க்காருக்குத் தகுதியும் இல்லை; உரிமையும் இல்லை என்ற கண்டிப்பு காணப்படுகிறதாம்!

கடிதப் போக்குவரத்து மட்டுமல்ல; காலம் சென்ற மௌலானா அபுல்கலாம் ஆசாத் ஒருமுறை நேரிலேயே லண்டனுக்குச் சென்றார், இதுபற்றிப் பேச. **1955**—ம் ஆண்டு, ஜூலை மாதம் இந்தியப் பேரரசின் கல்வி அமைச்சர் என்ற முறையில் லண்டனில் பேச்சு வார்த்தை நடத்திய ஆசாத் தோல்வியுடன்தான் திரும்பினார். இந்தியா வெள்ளையரின் சொந்தமாக இருந்த நேரத்தில் அமைக்கப்பட்ட நூலகம் அது; ஆகவே அதுவும் வெள்ளை அரசுக்குத்தான் சொந்தம்! மேலும், விலைமதிப்பற்ற நூல்கள் அடங்கிய அந்தக் கலைக்கூடத்தை இழந்துவிட இங்கிலாந்து ஏமாளிகளைக் கொண்டிருக்கவில்லை—இத்தகைய பதிலைத்தான் நேரிலே சென்ற ஆசாத்திடமும் சொல்லி அனுப்பினர், வெள்ளை அரசின் பிரதிநிதிகள்! அவரது வாதம் அனைத்தும் வெள்ளையர்களின் முரட்டு பிடிவாதத்தின் முன்னே சுக்குநூறாக உடைபட்டுப் போய்விட்டன!

அதற்குப்பின் நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் மாநாடுகளிலும் இந்திய அரசு இந்தப் பிரச்சினையை எழுப்பவில்லை! நடுநிலையாளர்களின் கவனத்திற்கும் கொண்டுவரவில்லை!

ஆனால் தொடர்ந்து கடிதங்களை மட்டும் எழுதி எழுதி வழியைப் பார்த்துக் கொண்டிருக்கிறது!

எனினும், நேர்மையான பதில் கிடைக்கவில்லை; பண்பற்றவர்களின் இதயத்திலே நீதிக்கும் இடமில்லை!

இந்த நாட்டு மக்கள்—கல்வியறிவில்லா பாட்டாளிகள் சிந்திய வியர்வையும், இரத்தமும்தான் கடல் கடந்த நாட்டிலே ஏடுகளாக உருமாறி இருக்கின்றன!—பல இலட்சங்களை விழுங்கி எப்பமிட்ட அந்த நூலகம் இங்கிருப்போருக்குப் பயன்பட வேண்டாமா? அல்லது ‘எங்களுக்குச் சொந்தமானது அது’ என்ற உரிமைகூடவா பறிக்கப்பட வேண்டும்?

அத்தகைய அரசுடன் காமன்வெல்த் என்ற கயிற்றால் பிணைக்கப்பட்டிருக்கும் இந்திய அரசு இனி என்ன செய்யப்போகிறது என்பதுதான் நல்ல இதயங் கொண்டவர்களின் வினாவாகும்! ஃ

முக்கிய அறிவிப்பு

★

இம் மாதம் **17**—ம்நாள் முதல் முரசொலி, தொடர் கதையுடன் **12** பக்கங்களில் வெளிவர இருந்தது. ஆனால் தேவையான அச்சுத் தாள் வருவதற்குத் தாமதமாகி விட்ட காரணத்தால்,

மே தினம் முதல்

12 பக்கங்களுடனும் “ரோமாபுரிப் பாண்டியன்” தொடர் கதையுடனும் உங்களைக் கிழமைதோறும் மகிழ்விக்கும் என உறுதியளிக்கிறோம்.

அத்துடன், முன்பு முரசொலியில் இடம்பெற்று உங்களைப் பெரிதும் கவர்ந்த கீழ்க்கண்ட பல பகுதிகள் மீண்டும் இடம்பெறும்.

★ நீட்டோலை
★ பிறைவானம்
★ நில் நண்பா; எங்கே ஓடுகிறாய்?
★ இயல்-இசை-கூத்து
★ எழுத்தாணி
★ குறளோவியம்

வெள்ளையர் விழுங்கிய நாடுகளில் விடுதலைக் கீதம் பிறந்த வரலாறு!

[ஜம்பு]

இருண்ட கண்டம் என்று கருதப்பட்ட ஆப்ரிக்காவில், இன்றையத் தினம் தேசீய எழுச்சி கடலெனக் கொந்தளிக்கின்றது. ஐரோப்பிய ஏகாதிபத்ய வாதிகளை, வெள்ளை நிற வெறியர்களை வீழ்த்திவிட்டுப் புதிய சமுதாயம் தேசீய உணர்வோடு அங்கே பூத்துவருவது, விடுதலை வேட்கையுடையோர்க்குப் புத்துணர்ச்சியை, புதுத்தெம்பை நல்குகின்றது. ஆப்ரிக்காவின் வட பகுதிகளில் உள்ள பல நாடுகள் அரசியல் விடுதலையடைந்து பொருளாதாரச் செழுமையுற— கடந்த கால வேற்றுமைகள் தொலைய முயன்றுகொண்டிருக்கின்றன. ஆப்ரிக்காவின் தென் பகுதியிலோ வெள்ளையர்கள் நிறம் காட்டி ஆதிக்க உச்சியில் இருந்துகொண்டு ஏனையோரை அவமதிப்புக்கு ஆளாக்கி வருகின்றனர். இந்த நிலைமைகளோடு, புதிய ஆப்ரிக்க ஒற்றுமையை ஆப்ரிக்காவில் உள்ள எல்லா நாடுகளிலும் காணமுடிகின்றது. ஆங்கிலேய, பிரெஞ்சு, பெல்ஜிய, டச்சு, இத்தாலி முதலான ஐரோப்பிய நாடுகளின் ஏகாதிபத்யப் பிடிப்பில் சிக்குண்டு, நிலைகுலைந்து முன்னேற்றம் அடையாமல் தடைபட்டுக் கிடந்தாலும்—முரண்பட்ட சமுதாய நிலைமைகள், கலாச்சார வேற்றுமைகள் — பல மொழிகள் கொண்டு விளங்கினாலும் தன்னாட்சி உரிமைபெற வேண்டுமென்பதில் தணியா ஆர்வத்தை எல்லா நட்டுகளும் இயற்கையாகவே அடைந்திருக்கின்றன.

மத்திய ஆப்ரிக்கக் கூட்டாட்சியில் உள்ள நியாசாலாந்தில் சிறிது காலத்திற்குமுன் நிகழ்ந்த கொந்தளிப்பு, ஆப்ரிக்கர்களைச் சுட்டுப் பொசுக்கிய கொடுமை, ஆயிரக் கணக்கிலே கைதுசெய்யப்பட்ட நிலைமை, நாடுகடத்தப்பட்ட கோரம் ஆகிய இத்தகு ஏகாதிபத்ய நடவடிக்கைகள் மத்திய ஆப்ரிக்காவில் முகிழ்த்து வரும் விடுதலை உணர்வையும், வெள்ளை நிற வெறியர்களின் திமிரை, ஒடுக்க நினைக்கும் மக்கள் எழுச்சியையும் எடுத்துக் காட்டுகின்றன. ஆனால், இத்தகைய நிலைமைகள் உருவாவதற்கான அடிப்படைக் காரணம் பழங்கால சரிதப் போக்கில் படிந்திருக்கின்றது. தங்கம் தாராளமாய் கிடைக்கும் என்ற வெறி, ஆங்கிலேய ஏகாதிபத்யம் தாரணி முழுதும் தழைக்க வேண்டும் என்ற மண்ணாசை, இவைகளைப் பெற எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் தன்மை ஆகிய மூன்றும் தான் மத்திய ஆப்ரிக்காவில் இன்று நிகழும் சம்பவங்களுக்கு மூலங்களாகும்.

செசில் ரோடீஸ் என்பவன் 1888-ம் ஆண்டில் ஆப்ரிக்க மன்னன் லொபென்குலாவிடம் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டான். எழுபத்தையாயிரம் சதுர மைல்கள் பரப்பளவு கொண்ட பெருநிலத்தில் கிடைக்கக் கூடிய கனிச் செல்வங்களைப் பயன்படுத்திக் கொள்ளுவதற்கான முழு உரிமையை செசில் ரோடீஸ் இவ்வொப்பந்தத்தின் மூலம் பெற்றான். இவ்வளவு பெரிய பரப்பில் கிடைக்கும் உலோகங்களை அடைவதற்காக, மன் லொபென்குலாவுக்கு தோறும் நூறு பவுன்களும், ஆயிரம் துப்பாக்கிகளும் செசில் ரோடீஸ் தரவேண்டும்.

இந்தப் பொருளாதாரச் சுரண்டல் கொள்ளை மாத்திரம் செசில் ரோடீசுக்கும், பிரிட்டிஷ் அரசி விக்டோரியாவின் சாசனத்தோடு அவன் உருவாக்கிய பிரிட்டிஷ் தென்னாப்ரிக்க கம்பெனிக்கும் நோக்கமல்ல. அரசியல் ஆதிக்க வெறியும், தனிப்பட்ட நஞ்சு தோய்ந்த ஆசைகளும் நிறைய உண்டு. எனவே, 1890-ம் ஆண்டிலேயே இருநூறு வெள்ளைச் சிப்பாய்களைக் கொண்டு, தென் ரொடிசியாவின் தலைநகரமாம் சாலிஸ்பரி என்ற பெயரில் இன்று விளங்குகின்ற மசோனலந்தைப் பிடித்தான். பிரிட்டனின் கொடி அங்கு பறக்கத் துவங்கியது. ஆப்ரிக்கர்களோ தங்களது வழக்கமான அமைதியில் ஆழ்ந்து கிடந்தனர்.

மூன்றாண்டுகளுக்குப் பின்னர், பக்கத்துப் பகுதிகளையும் பிரிட்டிஷ் தென்னாப்ரிக்கக் கம்பெனி பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஆப்ரிக்கர்களைக் கொன்று குவித்துத் தன்னுடைய ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்தது. இப்பகுதிகளை, செசில் ரொடீசின் நினைவாக ரொடிசியா என்றழைத்தனர்,

1889—லிருந்து 1914 முடிய தென் ரொடிசியாவை பிரிட்டிஷ் தென்னாப்ரிக்கக் கம்பெனியே நேரடியாக ஆண்டுவந்தது. 1914-ம் ஆண்டில் கம்பெனியின் சாசனம் முடிவுக்கு வந்தது. எனவே, புதிய அரசியல் பிரச்சினை ஏற்பட்டது. கம்பெனி சாசனத்தைப் புதுப்பித்துக்கொண்டு தென் ரொடிசியாவைத் தொடர்ந்து ஆளலாம். அல்லது தென் ரொடிசியா பக்கத்து நாடான தென்னாப்ரிக்க யூனியனோடு இணையலாம். கடைசியாக பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் குடியேற்ற நாடாகவும் மாறலாம். இந்த மூன்று வழிகளே 1914-ல் தென்பட்டன. பிரிட்டிஷ் சர்க்காரோ மேலும் பத்தாண்டுகள் பிரிட்டிஷ் தென்னாப்ரிக்கக் கம்பெனிக்கு தென் ரொடிசியாவை ஆளும் உரிமையை வழங்கி சாசனத்தைப் புதுப்பித்துத் தந்தனர். இந்தப் பத்தாண்டு காலத்திலேயே, தென் ரொடிசியா சுயாட்சி பெறலாம் என்றும் சாசனத்தில் கண்டிருந்தது.

1922-ல் கம்பெனிக்கும், குடியேறிய தனிப்பட்ட வெள்ளையர்களுக்கும் கடுமையான தகராறுகள் விளைந்தன. எனவே, பிரிட்டிஷ் சர்க்கார் தென் ரொடிசியாவின் வருங்காலத்தை நிர்ணயிக்க ஒரு வாக்கெடுப்பு நடத்தியது. தென்னாப்ரிக்க யூனியனோடு இணைய விரும்பாததோடு, மிகக்குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் தானே ஆண்டு கொள்ளுகின்ற பிரிட்டிஷ் குடியேற்ற சுயாட்சி நாடாக விளங்க தென்ரொடிசியா ஆசைப்பட்டது. 1923, செப்டம்பரில் தென் ரொடிசியா சுயமாக ஆண்டு கொள்ளுகின்ற குடியேற்ற நாடாக பிரிட்டனின் நேரடிப் பார்வைக்கு வந்தது. கம்பெனியின் நிர்வாகமும் முற்றுப்பெற்று விட்டது.

வட ரொடிசியாவும், நியாசாலாந்தும் பிரிட்டனால் வெற்றி கொள்ளப்பட்ட நாடுகள் அல்ல, அந்த நாட்டின் தலைவர்கள், நெருக்கடியான நிலைமைகள் வளர்ந்ததின் விளைவாக, தாங்களே விரும்பி, பிரிட்டனிடம் பாதுகாப்புக்குரிய நாடுகளாக உருவாக்கிக்கொண்டனர். கம்பெனியின் ஆட்சி முடிவுக்கு வரவே, அந்த இரு நாடுகளும் பிரிட்டனின் நேரடிப் பார்வைக்கு ஆளாயின.

தென் ரொடிசியா, வடரொடிசியா, நியாசாலந்து ஆகிய மூன்று நாடுகளின் வருங்கால நிலைமைகள் குறித்து ஆராயப்படுகின்ற நேரத்தில், பிரிட்டனின் குடியேற்ற நாடுகளின் நிர்வாகத்திலே பெரும் புகழ்பெற்ற ஆண்ட்ரு கோகன் என்பவர், தொழிற்கட்சி சர்க்காரின் குடியேற்ற நாட்டு அமைச்சரிடம் மேற்கண்ட மூன்று நாடுகளையும் இணைத்து, மத்திய ஆப்ரிக்கக் கூட்டாட்சி நாடாக நிறுவலாம் எனும் கருத்தைத் தெரிவித்தார்.

1952-ம் ஆண்டில் கூட்டாட்சிக்கான அரசியல் சட்டத்தின் நகல் தயாரிக்கப்பட்டது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு உள்ளும், வெளியிலும் இந்தக் கூட்டாட்சித் திட்டத்திற்குப் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. ஆனால், பாராளுமன்றம் இக் கூட்டாட்சி அமைய தன்னுடைய ஒப்புதலைத் தந்தது.

வடக்கு ரொடிசியாவும், நியாசாலாந்தும் பிரிட்டனின் பாதுகாப்பு நாடுகள் என்ற நிலைமையில் இருந்ததால், பிரிட்டிஷ் சர்க்கார் அவ்விரு நாடுகளைப் பொறுத்து எந்த காரியமாற்றினும் அதை அவைகள் ஏற்றுக்கொள்ள வேண்டியது சட்டப் பொறுப்பாக அமைந்துவிட்டது. எனவே, வடக்கு ரொடிசிய மக்களும், நியாசாலாந்து மக்களும் தங்களது விருப்பத்தையோ, எதிர்ப்பையோ சட்டப்படி தெரிவிக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது என்றாலும், வெள்ளையர்களைத் தவிர பெரும்பான்மையான ஆப்ரிக்கர்கள் மத்திய ஆப்ரிக்கக் கூட்டாட்சித் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தனர்.

தெற்கு ரொடிசியாவில் வாக்கெடுப்பு நடைபெற்று, கூட்டாட்சியில் இணைய தன்னுடைய இசைவை அளித்தது. ஆக, 1953 அக்டோபர் 23-ம் நாளில் தென் ரொடிசியா, வட ரொடிசியா, நியாசாலாந்து ஆகிய மூன்று நாடுகளும் இணைந்த மத்திய ஆப்ரிக்கக் கூட்டாட்சி உருவாகியது.

மொழி, வரலாறு, பூகோளம், மதம், வசதி இவைகளின் ஒற்றுமை அடிப்படையில் இக்கூட்டாட்சி அமையவில்லை. மூன்று நாடுகளுக்குள்ளும் மேற்கண்ட முறைகளில் எல்லா வகையான வேற்றுமைகளும் நிறைய உண்டு. பிரிட்டனின் ஆட்சி, இனச் சச்சரவுகள், இணைந்த நிலப் பரப்பு ஆகிய இந்த மூன்று பொது நிலைமைகளே மத்திய ஆப்ரிக்கக் கூட்டாட்சி அமையும் காரணங்களாக இருக்கின்றன.

நியாசாலாந்து மற்ற இரு நாடுகளைவிடச் சிறிய நாடாகும். மொத்த பரப்பு 49 ஆயிரம் சதுர மைல்கள்தான். ஆனால், மற்ற இரு நாடுகளைவிட அதிகமான ஆப்ரிக்கர்களை உள்ளடக்கியதாகும். 26 இலட்சம் ஆப்ரிக்கர்கள், 7500 ஐரோப்பியர்கள், 10,000 இந்தியர்கள் அங்கு வதிகின்றனர். செழுமையான பூமியைக் கொண்ட விவசாய நாடாகும். என்றாலும், நியாசாலாந்தின் வாலிபர்கள் வேலை தேடி வட, தென் ரொடிசியாவுக்கும், தென்னாப்பிரிக்காவுக்கும் செல்லுகின்றனர்.

தென் ரொடிசியா ஒன்றரை லட்சம் சதுர மைல் கொண்டது. மற்ற இரு நாடுகளைவிட அதிகமான ஐரோப்பியர்கள் வாழ்கின்றனர். 23 லட்சம் ஆப்ரிக்கர்களும், 1 லட்சத்து 75 ஆயிரம் ஐரோப்பியர்களும், 14 ஆயிரம் இந்தியர்களும் அங்கிருக்கின்றனர். மொத்தம் மக்கட் தொகையில் எட்டில் ஒன்றே ஐரோப்பியர்கள் இருப்பினும், நிலப் பரப்பில் சரிபாதி அவர்களுக்குச் சொந்தமாகும். விவசாயமே பெருந் தொழிலாகும்.

வடரொடிசியா, நியாசாலாந்தைப் போல ஆறு மடங்கும், தென் ரொடிசியாவைப் போல இரு மடங்கும் பெரிதாகும். செம்பு உலோகம் இங்கு நிறையக் கிடைக்கிறது. ஆண்டொன்றுக்கு 175 கோடி ரூபாய் மதிப்புக்கு உற்பத்தியாகின்றது. 21 லட்சம் ஆப்ரிக்கர்களும், 65 ஆயிரம் ஐரோப்பியர்களும், 8 ஆயிரம் இந்தியர்களும் வாழ்கின்றனர்.

[தொடர்ச்சி பக்கம்—8]

முத்தாரம் இதழ் 25-ல்

படிக்கத் தவறுதீர்கள்!

பனங்குலை

ஆசிரியர் மு. க. எழுதும்

கவிதை நடைச் சொல்லோவியம்!

கலைவாணர் வழியில் கலைஞர்கள்!

கலைவாணர் அவர்கள் நம்மையெல்லாம் விட்டுப் பிரிவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு சேலத்திலே நடந்த நிகழ்ச்சியொன்றை நடிகத் தோழர் ஒருவர் கண் கலங்க வருணித்தார்.

கலைவாணர் சேலம் "ஓட்டல்" ஒன்றில் தங்கியிருந்தாராம். திருமணத்திற்கு நன்கொடை கேட்டு சிலர் வந்தார்களாம். கலைவாணரிடம் கையில் பணமில்லை. யாருக்கும் தெரியாமல் தண்ணீர் குடிப்பது போல் பாவனைசெய்து வெள்ளிக் கூஜா ஒன்றினை எடுத்து நன்கொடைக்கு வந்தவரிடம் கொடுத்து அனுப்பி விட்டாராம். பின்னர் மதுரம் அம்மையார் கூஜாவைத் தேடிப் பார்த்து நடந்ததை அறிந்தார்களாம்.

இருந்த நேரத்திலும் இல்லாத நேரத்திலும் வாரி வாரிஇறைத்த வள்ளல் நகைச்சுவை மன்னரா வார்.

அவர் வழி வந்த கலைஞர்களாம் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களும் நாடும் ஏடும் வாழ்த்திடும் வண்ணம் பெருநிதி வழங்கிப் பெருமை பெற்றிருக்கின்றனர்.

பள்ளிக்கூடம்—நூல் நிலையம்—அனாதை விடுதி — போன்ற அற நிலையங்கள் அமைக்கப் பொதுப் பணிக்கு ஊக்கம் தந்திட எம்.ஜி. ஆர். அவர்கள் நிதிப் பாதுகாப்புக்குழு ஒன்றினை அமைத்து அதன் வழி மூன்று லட்சம்ரூபாய் செலவிடத் திட்டமிட்டுள்ளார். லட்சோப லட்சம் மக்களின் இதயத்தில் நல்லிடம் பெற்ற புரட்சி நடிகருக்கு நாமும் அன்புகனிந்த வாழ்த்துக்களைக் குவிக்கிறோம்.

'நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்!" என்ற பாரதியின் வேண்டுகோளை நமது கலைஞர் பெரு மக்கள் செவியிலேந்திச் செயல் புரியத் தொடங்கியிருப்பது காணத் தமிழகம் பூரிப்படைகிறது. சென்னையில் பயிலும் பிள்ளைகளின் பிற்பகல் உணவுக்காக சிவாஜி தந்துள்ள ஒரு இலட்ச ரூபாய் கொண்ட வெண் பொற்கிழிகண்டு ஏழையர் உள்ளம் குளிர்ந்தது. நாமும் அவரை வாழ்த்தி மகிழ்கிறோம்.

நடிகர்களைச் சாதாரணமாக மதித்து ஏதேதோ பேசிக்கொண்டிருந்த காங்கிரஸ் பிரமுகர்களுக்கும் பிரசங்கிகளுக்கும் இரு பெரு நடிகர்களும் தக்க சமயத்தில் — தக்க பாடம் — தக்க செயல் மூலம் — கற்பித்துள்ளனர்.

புரட்சி நடிகருக்கு நிதி அமைச்சர் வாள் வழங்கிப் பாராட்டினர்! பலப் பலப் புகழ்ந்தார்!

சிவாஜி வழங்கிய நிதி கண்டு முதலமைச்சர் வாய் பிளந்து வாழ்த்தி நின்றார்!

'இனியேனும் 'சினிமாக்காரர்கள்,' 'நாடகமாடிகள்,' என்றெல்லாம் இழிமொழி பேசித் திரியும் காங்கிரஸ் கனவான்கள் தங்கள் தவறுக்கு வருந்தி நல் வழி நடப்பார்களா?" என நாடு கேட்கிறது, இதோ நாட்டு மக்களின் வாழ்த்தொலி நம் காதில் கேட்கிறது.

"வாழ்க எம். ஜி. ஆர்!"

"வாழ்க சிவாஜி!!"

அவர்கள் உள்ளங்கை சிவக்கு மட்டும் வாரி வாரிப் பாரிபோல் வழங்கட்டும்—வான் மழைபோல் கொடையுள்ளம் நிலைக்கட்டும்—இவர்கள் அறவழியை இன்னுமுள்ள நடிகர்களும் கலைத்துறை நண்பர்களும் பின்பற்றட்டும்- புரட்சி நடிகரை நம் தாயகம், **'புதிய குமணன்'** என அழைக்கட்டும்! **'சீதக்காதி'** இவர் தானே என சிவாஜியைத் தாயகம் புகழட்டும்!

உடன்பிறந்த கலைச் சகோதரர்களுக்கு நம் உளங்கனிந்த வாழ்த்துக்கள் உரியதாகுக!

தாய்க்குத் தகரக்கிண்ணி - வடக்குப் பேய்க்குப் பசும்பொற்குடமோ ?

அளவு பேதத்தைக் கவனியாது தேசிய விருந்தை அதிகமாக உண்டு விட்டதால் இன்று உடல் நலமற்று, மனவளமற்றுத் திரிகின்ற 'அரசியல் அஜீர்ணவாதிகளை'த் தமிழகம் தாங்கிக் கொண்டுதானிருக்கிறது. அவர்களுக்கு நாம் பன்னிப் பன்னி சொன்னாலும், நம்முடைய ஏழ்மை நிலை புரியாது; ஏய்க்கப்படும் கதை தெரியாது. புரிந்தாலும், வெகு பத்திரமாக மனப் பெட்டிக்குள்ளேயே அடக்கி வைத்துக் கொள்ளும் பயிற்சியும் பெற்றிருக்கிறார்கள், சிலர்!

துன்பச் சகதியில் சிக்கித் தவிப்போருக்குத் தங்கள் கஷ்ட நஷ்டங்களை ஆயிரமாயிரம் முறை திருப்பித் திருப்பிச் சொன்னாலும் சலிப்பேற்படாது. அதுபோல் 'தென்னகம் தேய்கிறது' என்கிற உண்மையை நாம் எவ்வளவு தரம் எடுத்துச் சொன்னாலும் மக்களுக்குச் சலிப்பு ஏற்படுவதில்லை!

காவிரிக் கரையின் வளமும், வாழ்வும், யமுனை நதிக்கரையின் நாயகர்களிடம் இருப்பது நல்லதல்ல; நெடுநாள் நிலைக்கக் கூடியதல்ல—என்று அடிக்கடி கூறப்படுகிறது, மக்கள் மன்றத்திலும், சட்ட மன்றத்திலும்!

நம்முடைய அமைச்சர்கள் இந்த உண்மையை உணர்ந்தாலும், 'இது எதிர்க்கட்சிக்காரனுடைய பேச்சு! ஆகவே, அவன் பாட்டிற்குப் போடு இரட்டைத் தாழ்ப்பாள்' என்னும், விதமாக அவர்கள் நடந்து வருகிறார்கள்.

பேச்சில் தத்து நடை போடும் சில • 'பெரிய அமைச்சர்கள்' 'வடக்கு தெற்கு என்பதெல்லாம் பொய். அவர்கள் பேச்சை நம்பாதீர்கள்!' — என்று மட்டுமே கூறித் தங்கள் பேச்சை முடித்துக் கொள்கிறார்கள்.

நன்கு பேசத் தெரிந்தவர்களாக அவர்கள் முகாமில் கருதப்படுபவர்களோ, இழித்துப் பழித்துப் பேசுபவர்களாகவும், தனிப்பட்டவர்களைத் தூற்றும் திறம்படைத்தவர்களாகவும் இருக்கிறார்களே தவிர, 'தென்னகம் தழைத்துப் பூத்துக் குலுங்குகிறது, வடக்கின் வளத்தைக் காட்டிலும்!' —என்று ஆதாரத்தோடு (மேடையேறி) ஒழுங்காகப் பேசுபவர்கள் இல்லவே இல்லை.

அவர்கள் பேசாமடந்தைகளாய் இருப்பதற்குக் காரணம் நாம் அடிக்கடி சொல்லி வருகின்ற சேதிகளில் பொதிந்து உள்ள உண்மை எனும் ஆழம் தான்!

நம்முடைய பேச்சுகள் மக்களின் உணர்வு நரம்புகளைத் தடவி, நம் நாடு இருக்கும் அவல நிலையை, நாட்டு மக்கள் படுகின்ற • அவதியை உணரச் செய்கின்றன. எனவேதான் அமைச்சர்கள் அஞ்சி நடுங்குகிற அளவிற்கு 'தெற்கு—வடக்குப் பிரச்னை' வளர்ந்து கொண்டே போகிறது.

அண்மையில் ஆயுள் இன்சூரன்ஸ் கம்பனி முதலீடு பற்றி சேதி ஒன்று வந்தது. அது, வடக்கின் வஞ்சகத்தைத் மிக மிகத் தெளிவாக எடுத்துக் காட்டும் ஒரு நல்லாதாரமாக விளங்கிற்று.

தென் மாநிலங்கள் அதிகமான 'பிரீமியம்' கட்டியிருந்தும், குறைவான அளவே முதலீடு ஒதுக்கப்பட்டிருப்பதையும் அதற்கு எதிர்மாறாக வட நாட்டிற்கு அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருப்பதையும் அச்செய்தி கூறிற்று! அந்த அறிக்கையின் மேலோட்டத்தில் காண்கின்ற வடக்கிற்கு அளிக்கப்படும் தனிப்பட்ட சலுகை, அதில் குறிப்பிட்டுள்ள 23 தொழில்களிலும் காணப்படுகிறது.

பஞ்சாலைத் தொழில்களுக்கான முதலீடு சென்னை மாநிலத்திற்கு 118.16 இலட்சமென்றால், பம்பாய் மாநிலத்திற்கு மட்டும் 290·38 இலட்சங்கள்! அது தவிர்த்த வட மாநிலங்களுக்கு மற்ற தென் மாநிலங்களைவிட மிக மிக அதிகமான அளவில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. டில்லிக்கு—75·22 இலட்சம். உத்திரப் பிரதேசத்திற்கு — 72.01 இலட்சம்! மத்தியப் பிரதேசத்திற்கு—52.05 இலட்சம். மேற்கு வங்காளத்திற்கு—47·11 இலட்சம்.

ஆனால், மைசூருக்கு — 20·23 இலட்சம்! ஆந்திராவிற்கு — 8·14 இலட்சம்! கேரளத்திற்கு —1·69 இலட்சம்!

பொதுவான கண்ணோட்டத்தில் தென் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் பணத்தைக் காட்டிலும் இரண்டு மடங்குப் பணம் அங்கு ஒதுக்கப்படுகிறது.

பஞ்சாலைத் தொழிலில் பம்பாயிற்கு இருக்கும் ஏகாதிபத்யப் பிடிப்பு இந்த உதவி மூலம் மென்மேலும் உறுதிப்படப் போகிறது.

ஆட்சியையும் ஆதிக்கத்தையும் தொழிலையும் நாட்டில் பரவலாக அமைக்க வேண்டுமென்கிற திட்டத்தின் அடிப்படையில் வேலை செய்கிற இந்த ஆட்சி, தன் 'பரவல் முறைக் கொள்கையை' இந்தப் பாதகம் நிறைந்த செயலால் சாகடிப்பதோடு மட்டுமல்லாமல், தென்னகத்தில் வளருகின்ற விடுதலையுணர்வின் ஆரம்பக் குணமான வடவராட்சிபற்றிய அதிருப்தியை மென்மேலும் வளர்க்க உதவுகிறது.

அத்தகைய அதிருப்தியை மேலும் வளர்த்துகின்ற வண்ணம் மின்சாரத் தொழில்கள் பற்றிய புள்ளிவிவரத்தை அந்த அறிக்கையே தருகிறது.

பம்பாய் மாநிலத்திற்குமட்டும் —556·82 இலட்சம் ரூபாய்; மேற்கு வங்காளத்திற்கு மட்டும் - 162·35 இலட்ச ரூபாய்; உத்திரப் பிரதேசத்திற்கு—62·04 இலட்ச ரூபாய்; பீகாருக்கு-28·51 இலட்ச ரூபாய்.

ஆனால் வடவன் தாள் பிடித்து, வந்தேமாதரம் என்று வடக்கு மாதாவை வாழ்த்தித் திரிகின்ற நம்மவருக்குக் கிடைத்த பங்கைப் பாருங்கள்; சென்னைக்கு—12·72 இலட்ச ரூபாய். மைசூருக்கு 82 ஆயிரம் ரூபாய்! ஆந்திராவிற்கு 53 ஆயிரம் ரூபாய்!! கேரளத்திற்கு 3 ஆயிரம் ரூபாய்!!!

பம்பாயிற்கு மட்டும் 556·82 இலட்ச ரூபாய். நான்கு மாநிலங்கள் சேர்ந்த திராவிடத்திற்கு மட்டும் 14·10 இலட்ச ரூபாய்.

ஏனிந்த அநீதி?

எதைப்பற்றியும் கவலைப்படாத நம் அமைச்சர்களும், அவர்களை ஆட்டிப்படைக்கும் டில்லி பேரரசும், தெற்கைத் தேயவிடும் இந்த அநீதிக்கு முதற் காரணகர்த்தர்கள்!

அநீதிப் பட்டியல் இதோடு மாத்திரம் நின்றுவிடவில்லை. 23 தொழில்களிலும் இந்த அநீதி தலைதூக்கி நிற்கிறது.

இயந்திரத் தொழில் முயற்சிக்கான துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தின் பகுப்புகள் வருமாறு:—மேற்கு வங்கத்திற்கு —465·07 இலட்ச ரூபாய். பம்பாயிற்கு—120·60 இலட்ச ரூபாய். பீகாருக்கு 98·67 இலட்ச ரூபாய் ஆனால் சென்னை மாநிலத்திற்கு 23·64 இலட்ச ரூபாய்.

இப்படிப் புள்ளிவிவரங்கள், தென்னகம் வடக்குப் புலி வயிற்றிலிருக்கும் புள்ளிமான் என்பதையே அடிக்கடி கூறி வருகின்றன, நாட்டு நடப்பைக் கூர்ந்து கவனிப்பவர்களுக்கு!

நாம் எல்லாத் துறையிலும் எல்லாக் காலத்திலும் ஏமாற்றப்பட்டு வருகிறோம் என்பதை அத்தகைய செய்திகள் அடிக்கடி சொல்லியும் நம் அமைச்சர்களுக்குச் சூடு பிறப்பதில்லை.

மாறாக, 'மாநிலங்களில் சென்னையே முன்னிலையில் நிற்கிறது. இதற்கு ஈடு ஏது; உவமையேது!'—என்று ஒட்டுமொத்தமாக ஓட்டு வாங்கும் கூட்டத்திலும், திறப்புவிழாக்களிலும் நம் அமைச்சர்கள் முழங்கி வருகிறார்களே தவிர, நாம் தருகின்ற புள்ளிவிவரங்களுக்கு மறுப்புகளையோ, நாம் கூறிவருகின்ற கருத்துக்களைத் தகர்க்கும் வன்மைபடைத்த ஆதாரங்களையோ அவர்களால் தரமுடிவதில்லை!

"ஏக பாரதம், அகில இந்தியா, தேசிய ஒற்றுமை," என்கிற இனிப்புத் தடவிய நீர்வாழைக் குளிகைகளைக் காட்டி மயக்கிவிட நினைக்கிறார்கள்.

இந்த வலிமையற்ற தக்கைச் சங்கிலிகளால் விந்தியத்தால் பிரிக்கப்படும் இரு நாடுகளை இழுத்துக் கட்ட நினைக்கிறார்கள், ஒவ்வொரு துறையிலும் தென்னகத்தைப் புறக்கணித்துவிட்டு!

இலக்கிய, வரலாற்று மரபுகளால் வடநாட்டினின்று முரண்பட்ட தேசிய இனமாம் தென்னகத்தில் இன்று பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் வடவர் ஆட்சியைப்பற்றிய மனக்கசப்பும், முரண்பட்ட கொள்கைகளும் வளர்ந்து வருவதையும் தங்களின் 'பாரத'க் கோட்டை இடிந்து வருவதையும் அவர்கள் கண்களாலேயே பார்த்து மருகுகிறார்கள்!

அவர்களுடைய ஜனகணமண சங்கீதம், சாம்ராஜ்யங்களை நிறுவியாண்ட இனமாகிய தென்னகத்தாரின் விடுதலை உணர்ச்சியை அழிக்கமுடியவில்லை!

தீவிரமான சாதி ஒழிப்பும், தெருவோரத்துச் சுவரொட்டிகளும்!

"ஜாதிகளை ஒழித்தாலொழிய நாட்டுக்கு விமோசனம் கிடையாது. அரசியலில் அனாதிகாலம்தொட்டு காங்கிரஸ்தான் ஜாதி ஒழிப்புப் பற்றிப் பேசி வந்திருக்கிறது. ஜாதி ஒழிப்பிற்கு அது ஆற்றிய தொண்டு ஏட்டிலடங்காது !"

—சென்னை மந்திரிகள் முழக்கம், சில பல மாநாடுகளில்!

"விநோபா அவர்களே! தங்கள் மூன்று திட்டத்தில் ஒன்றான ஜாதியழிப்புத் திட்டத்தை மனப்பூர்வமாக நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். காங்கிரஸ் மந்திரிகளான நாங்கள் சொன்ன சொல் தவற மாட்டோம். இது உறுதி! ஜெய், ஜெய், ஜெகத்!"

—மிகப் பணிவுடன் விநோபாவின் காலடிகளில். அமர்ந்து கொண்டு பேசி மகிழ்ந்தார்கள், அதே சென்னை மாநில மந்திரிகள்!

ஆனால்......தேர்தல் வந்ததும் கீழ்க் கண்டவாறு 'வால் போஸ்டர்கள்' சிலபல தென்பட்டன.

★ " விருது நகரில் காமராஜ நாடார் பேசுவார்! "

★ " தாராபுரத்தில் சுப்ரமணியக் கவுண்டர் முழங்குவார் !"

★ "காங்கிரஸ் முதலியார்கள் சங்கத்தில் பக்தவத்சல முதலியார் தெருப் பிரச்சாரக் கூட்டம்!"

★ " வன்னியர் தெருவில் மாணிக்கவேலு நாயக்கர் சொன்மாரி பொழிவார் !"

★ " மேலூர் கீழச் சேரியில் நமது கக்கன்ஜி (ஷெட்யூல்டு) சொற்பொழிவு!"

★ " மதுரையில் (புதுக்கோட்டை சேர்வைக்காரரான) கனம் ராமையாத் தேவர் பேசுவார்!

★ " நாகர்கோவிலிலுள்ள மாதா கோவில் திடலில் லூர்தம்மாள் சைமன் பிரசங்கிப்பார் !

'சாக்ளா விடு தூதும்' - நம்மைச் சீரழிக்கும் தொழு நோய்களும்!

"சகியே! சகிக்க முடியவில்லையடி என் விரகதாபம். என் காதலன் முகத்தைக் காணமல் வாடி வதங்கிடும் என் நிலையை அவருக்கு எடுத்துச் சொல்ல வழியே இல்லையா?"

"ஏன்'ம்மா இல்லை? தூது அனுப்பி உங்கள் துன்பத்தை எடுத்துச் சொல்லுங்களேன்!"

"யாரையடி தூது அனுப்புவது?"

"தூது அனுப்புவதற்கா பொருட்கள் இல்லை? கானம் பாடும் கருங் குயிலை அனுப்பலாமே?"

"குயில் நல்ல வேளை வந்தால் தானடி பாடும்! போர்க்களத்தில் அவர் இருந்தால் இந்தக் குயில் அங்கு போகாதே!"

"மலர் வண்டை அனுப்புங்களேன்!"

"மலர்தரும் மதுவை உண்டு விட்டுத் தலைவன் முன்னல் அந்த வண்டு உளறுமே!"

"கலாபமயிலை அனுப்பினல்?"

"கோபம் அதற்கு மூக்கிலே வருமடி...தூது சொல்வதற்கு வேண்டிய பொறுமை அதனிடம் இல்லை!"

"அன்னத்தை அனுப்புங்களேன்."

"அன்னம் தண்ணீரை விட்டு நல்ல பாலைக் குடிக்கும் பண்புடையது. அது நல்லனவற்றைத் தானே கூறும். தீயனவற்றைக் கூருதே!"

"சோலைக்கிளியை அனுப்பலாமே?"

"சொன்னதைத் தானே அது சொல்லும்! மிகைப்படுத்திக்கூறி காதலன் உள்ளத்தைக் கனிய வைக்க முடியாதே, அதனல்!

"பாட்டால் மயக்கிடும் நாகணவாய்ப் பறவையை அனுப்பினல்...?"

"பேரொலி எழுந்தால் அது விழுந்து இறந்துவிடுமே!"

"கார்காலத்து மேகத்தை அனுப்பலாமே?"

"கடுங் குரலில் இடியிடித்துக் கத்துமேயடி. என் கண்ணளன் காது செவிடாகி விடுமே!"

"என்னைப் போன்ற தோழியை அனுப்புங்களேன்!"

"அவர் அழகைக் கண்டு சொக்கி நின்று விடுவாயே! போன காரியத்தை மறந்து விடுவாயே!"

"ஓகோ!......ம்........தென்றலை அனுப்புங்களேன்!"

"அது தெற்கு நோக்கி அடிக்காதே! என் காதலனின் போர்க்களம் நமக்குத் தெற்கேயல்லவா இருக்கிறது?"

"சரி.......உங்கள் நெஞ்சை அனுப்புங்களேன்!"

"ஐயோ! அந்த நெஞ்சுதான் இங்கு கிடந்து தவிக்குதே!"

"புலவன் சொன்ன தூதுப் பொருட்கள் முழுவதும் முடிந்துவிட்டதம்மா! நீங்களே கண்டு பிடித்துக் கொள்ளுங்கள்! — என்று சலிப்புடன் கூறினள் தோழி.

நெடு நேரத்திற்குப்பின் தலைவி தூது செல்வதற்கான சரியான தூதுவனைக் கண்டுபிடித்தாள்! அது வேறு யாருமில்லை. தலைவனும் தலைவியும் கூடி மகிழ்ந்த போது, கூட இருந்த 'நாரை' தான்! அந்த நாரைக்கு இவர்களின் பழைய கதை மட்டுமல்ல— இவர்களின் தவறுகளும் தெரியும். தன் தவறுகளை உணர்ந்த அந்த நாரையைத்தான் தூது அனுப்புகிறுள் அந்தத் தலைவி!

★★★

இந்தியத் துணைக்கண்டத்தையும், அரசாங்க அஸ்திவாரத்தையும் ஒரு குலுக்குக் குலுக்கிய 'முந்திரா விவகாரத்தைத்' தெட்டத் தெளிவாக்கி, தவறுகளை எடுத்துக் கூறிய சாக்ளா என்பவர் அமெரிக்காவிற்குத் தூதுவராகப் போயிருக்கிறுர்.

டி. டி. கே-க்களும், மொரார்ஜிகளும், ஜி. எல். மேத்தாக்களும் சாதிக்காத காரியத்தை, தம் தவறுகளை எடுத்தியம்பிய இந்த இந்த 'சாக்ளா' சாதிப்பார் என நினைத்து அனுப்பியிருக்கிறுர்கள்.

குயிலும், கிளியும், கார்மேகமும் சாதிக்காத காரியத்தை நாரை சாதிக்கும் என நினைத்த மேற் சொன்ன தலைவியின் செயலை நினைவுபடுத்துகிறது, இந்த பாரத சர்க்காரின் செயல்!

அந்த 'நாரை விடு தூதி'னல் தலைவிக்கு ஒருவித நன்மையும் கிடைக்கவில்லை. ஆனல் 'சாக்ளா விடு தூது'வினல் இந்தியத் துணைக்கண்டத்திற்கு கடன் அதிகம் கிடைக்கப் போகிறதாம்!

இதைப்பற்றி பத்தி பத்தியாக வடநாட்டுப் பத்திரிகைகள் எழுதுகின்றன; சாக்ளாவிற்குத் துதி பாடுகின்றன!

★★★

காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதை சாக்ளா பெற்ற அமெரிக்கக் கடன் என்பதைப் பூசி மெழுகி மறைக்க முயல்கிறுர்கள், வடநாட்டுப் பத்திரிகைக்காரர்கள்! கம்யூனிஸத்தைப் பரவாமல் தடுக்க அமெரிக்கா செய்து வரும் 'பொருளாதார உதவி' என்கிற 'கம்யூனிஸ எதிர்ப்பு நடவடிக்கையின்' விளைபொருள் தான், ஏப்ரல் முதற்கொண்டு 5 பெரிய நாடுகள் இந்தியத் துணைக் கண்டத்திற்குத் தரும் 30 கோடி டாலர்! இந்த 30 கோடி டாலரை சாக்ளாவே தன் வாதத் திறமையாலும், இன்மொழியாலும் பெற்றுவிட்டதாக மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறது. இந்திய அரசாங்கம், அவருக்கு!

இப்படி இங்குள்ள கம்யூனிஸத்தைக் காட்டி, அதை ஒழிப்போம் என உறுதி கூறி வாங்கப்படும் பணம்தான், நம் ஐந்தாண்டுத் திட்டங்களின் அஸ்திவாரங்களாகப் போடப்படுகிறது,

★★★

கம்யூனிஸத்தைக் களபலிகொடுக்க வாக்குறுதிதந்து அமெரிக்காவிடமிருந்து, வாங்கப்பட்ட பணம் ஏறத்தாழ 650 கோடி ரூபாய்!

அந்த 650 கோடி ரூபாயிற்காவது 'பதிவிரதைகளாக' இருக்கிறுர்களாயென்றல் அதுவுமில்லை!

'ஏகாதிபத்ய எதிர்ப்பு; சோஷலிஸ சமுதாயம்' — ஆகியவைகளைக்காட்டி, ரஷ்யாவிடமிருந்து பெறும் பணம் 120 கோடி ரூபாய்!

[தொடர்ச்சி பக்கம்—8]

'வஞ்சுந்திரப் பேச்சு!'

காடுகள் பராமரிப்பு இலாக்காவினுல் ஏற்படுத்தபட்ட ஒரு கூட்டத்தில் நம் காமராசர் தன் மேதாவிலாசத்தைக் காட்டிக் கொண்டார். (அதைச் சிலர் அறியாமையில் விளைந்த கோமாளித்தனம் என்றும் கூறுகிருர்கள்.) காடுகளின் அவசியத்தைப்பற்றியும் அதன் பயனைப்பற்றியும் அந்த இலாக்கா விற்பன்னர்களே வியந்து மயக்கம் போட்டு விடும் வண்ணம் பேசினுர். தம் பூகோள அறிவைக் காட்டி அவர்களைப் பிரமிக்கச் செய்து விட்டார்! உலகம் கேட்டிராத அந்தப் புதுக் கருத்துக்கள் வருமாறு:—

"காடுகள் நமக்கு அவசியம். காடுகள் நமக்கு ஏன் அவசியம் என்ருல் நமக்குத் தண்ணீர் அவசியம். தண்ணீரைப் பெருக்குவதற்கு நமக்குக் காடுகள் அவசியம். தண்ணீர் வசதி ஏற்படுவதற்குக் காடுகள் அவசியமாகத் தேவை. காடுகளை அழித்துச் சாகுபடி செய்யக் கூடாது. ஏனென்ருல் காடுகள் பல விஷயங்களை உத்தேசித்து அவசியமாதலால் அவற்றைக் காப்பாற்ற நாம் முயற்சி எடுக்க வேண்டும்."

–இந்தச்செய்தி, நம்மால் உண்டாக்கப்பட்டதல்ல. 8—4—59-ம் நாளிதழான 'சுதேசமித்திரன்' இரண்டாம் பக்கத்தில் வெளியான செய்தியேயாகும்.

இன்னெருமுறை படித்து ஆனந்திக்கும்படி காமராஜர் பேச்சு இருப்பதைக் காணுங்கள்! ஆகா!......காடுகளின் அவசியத்தைப் புற்றி தெளிவாக, ஆதாரத்தோடு, உவமைகளோடு, நெஞ்சைத் தொடும் நிகழ்ச்சிகளோடு சொல்வது அனுவசியம் என்று நினைத்த அவர் எவ்வளவு ரத்தினச் சுருக்கமாகக் கூறுகிருர் பாருங்கள்.

"காடுகள் நமக்கு ஏன் அவசியமென்ருல் நமக்குத் தண்ணீர் அவசியம்!" — ஓகோ....என்னே அறிவு! காடுகள் அவசியத்தைத் தண்ணிருடன் எளிதாக ஒட்ட வைக்க எந்த அரசியல் அறிஞனலாவது முடியுமோ? முடியவே முடியாது.

"காடுகள் பல விஷயங்களை உத்தேசித்து அவசியமாதலால் அவற்றைக் காப்பாற்ற நாம் முயற்சி எடுக்க வேண்டும்."

—அம்மம்மா! என்னே வியாக்யானம்! என்னே அரும்பொருள் விளக்கம்! காடுகள் காப்பாற்றப்படவேண்டுவதைப் பற்றி எவ்வளவு அழுத்தம் திருத்தமாகக் கூறுகிருர் பாருங்கள்!

★★

சொல்லவந்ததைத் தெளிவாக விளக்கத் தெரியாமல் இப்படிப் போட்டுக் குழப்பி வைப்பதைத் தாஞ அருமை! அருமை! என்று கூறுகிறீர்கள்?" — என்று பலர் கேட்கலாம்.

"வானம் அளந்ததனைத்தையும் அளந்த வளர்மொழியாம் தமிழ்மொழி வாழும் தமிழ் நாட்டிற்கு இப்படிப்பட்ட மனிதரா முதல் அமைச்சராக வருவது?"— என்று பலர் வினவலாம்!

அப்படிக் கேட்கத் துடிக்கும் பலரின் குரலை, அதே கூட்டத்தில் பேசிய பக்தவத்சலம் தன்னை அறியாமலேயே பிரதிபலித்து விட்டார்.

காடுகளைப் பற்றிய காமராஜரின் பேச்சைக் கேட்டவுடனேயே பக்தவத்சலத்தின் உள்ளம் முற்காலத்தில் காடுகளில் வாழ்ந்த மனிதர்களைப் பற்றி நினைத்தது: அவர்களுடைய அறியாமையைப் பற்றி நினைத்தது; முதலமைச்சரின் பேச்சைக் கேட்டதும் இருள் சூழ்ந்திருக்கும் காடுகளுக்கும் நமக்கும் இருக்கும் தொடர்பு அறுபடவில்லை என்று தோன்றிற்று! உடனே பேசினுர்;

"மனித வாழ்க்கை காடுகளிலிருந்துதான் ஆரம்பித்தது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்!"

'ஆமாம்!' தெரிந்த விஷயம் தான்! அதுவும் முதலமைச்சர் பேச்சைக் கேட்ட பிறகு நிரூபணம் வேறு தேவையில்லை' என்று மக்கள் நினைத்துக் கொண்டனர்.

"மனிதனுக்கும் காடுகளுக்கும் அந்தக் காலம்தொட்டு தொடர்பு இருந்து வருகிறது" — என்ருர் பக்தவத்சலம்.

மக்களும் ஆமோதித்தனர். 'தொடர்பில்லாமலா நாம் இப்படிப்பட்ட வஞ்சுந்திரப் பேச்சுகளைக் கேட்கிருேம்,' என்று எண்ணிக் கொண்டனர். மந்திரி பேசி முடித்தார்; கார் பறந்தது; கூட்டம் கலைந்தது!

இந்த நிகழ்ச்சி தருகிற பாடம் அமைச்சர்கள், குறிப்பாக முதலமைச்சர் தமக்குத் தெரியாதவற்றில் தலையை மாட்டிக் கொண்டு மிகவும் அவதிப்படுகிருர் என்பதையே காட்டுகிறது.

காடுகளைப்பற்றியும், அதன் அவசியத்தைப்பற்றியும் தெளிவாகத் தெரிந்து கொள்ளாதவர் அங்கு ஏன் போக வேண்டும்? மாலைக்கும் மரியாதைக்கும் ஆசைப்பட்டுக் கொண்டு தன் அறியாமையை வெளிக்காட்டிக் கொள்ளுகிருர், அந்தோ பாவம்!

பாலபருவத்துப் பூகோளப் பாடங்களை அறிந்து கொண்டாவது போயிருந்தால் சகமந்திரியின் சாமர்த்தியமான தாக்குதலுக்குத் தப்பியிருக்கலாமே! ⁂

சாக்ளா...

[7—ம் பக்கத் தொடர்ச்சி]

பணம் வரும் திசைக்குப் புன்னகை புரியும் இந்தப் பண்பாளர்கள் அந்தப் பணத்தைக் கொண்டு நல்ல பயனைப்பெறுவதும் இல்லை!

★★★

பஞ்சாப் கவர்னர் என். வி. காட்கில் என்பவர் சொல்வது போல், ஊழல், லஞ்சம், ஆதிக்கப் போராட்டம், தாறுமாருன பயிற்சிகள், மோசமான நிர்வாகம்—எனும் ஐந்து தொழுநோய்கள் நம் நாட்டின் திட்டங்களை உருக்குலைத்து வருகின்றன.

● லஞ்சத்தால் ஊழலும், ஊழலால் லஞ்சமும் தாலுகா ஆபீஸிலிருந்து, தலைமைப் பீடம் வரை இருக்கிறது.

● அலுவலகங்களில் பதவிப் போராட்டங்களாலும், நம்ஜாதி, நம்மினத்தான் என்கிற பேத உணர்ச்சியின் மோதல்களாலும் பொதுமக்களின் காலமும் கைப்பொருளும் வீணடிக்கப்படுகின்றன.

● மோசமான நிர்வாகம் ஏற்படுவதற்குக் காரணம், அலுவலகத்திற்காக யாரும் அங்கு பணிபுரியப்போவதில்லை. மாதச் சம்பளம் பெறுவதற்காகவே அலுவலகத்திற்குள் போய் உட்காருகிருர்கள் என்பதே! இது சாதாரணக்கணக்கர்களின்முழுத் தவறல்ல; ஆளுபவர்களின் திறமைக் குறைவால் ஏற்படும் தவறு!

—மேற்கூறிய ஐந்து தொழுநோய்களையும் அடிவேரறக் களைந்தெறியும் வைத்தியம் எது வென்பதைப்பற்றியும் காட்கில் கூறியிருக்கிருர்.

அந்த வைத்தியம் எளிதான வைத்தியமன்று!

அதிர்ச்சி வைத்தியம்!

தேர்தல் எனும் அதிர்ச்சி வைத்தியம்!

ஆம்!—அந்த அதிர்ச்சி வைத்தியத்தின் மூலமே இந்த நோய்களை அகற்ற முடியும்.

சாக்ளா தூதுபோய், கோடி கோடியாகப் பொன்மூட்டைகளை கொண்டுவந்து குவித்தாலும், சோஷலிஸக் கித்தாப்புக்கொட்டி கம்யூனிஸத்தின் கருவூலத்தையே இங்கு தூக்கிக்கொண்டு வந்தாலும் ஆட்சியைப் பற்றியுள்ள நோய்கள் தீர்ந்தாலொழிய, சந்து முனைகளிலும், குடிசைப் பொந்துகளிலும் வாழ்க்கை நடத்துவோரின் துயர் துடைக்கப்படமாட்டாது; ஆட்சியாளரின் உதவிக்கரங்கள் இவர்களின் குடிசை வாயில்களுக்கு வராது!

அந்தத் தொழுநோய்கள் தீர, தேர்தல் எனும் அதிர்ச்சி வைத்தியம் தேவை!

அதுவும் குறிப்பாக சென்னையில் நடக்கும் அரசிற்கு அந்த வைத்தியம் அவசர அவசியமான தேவையாகும்! அண்மையில் நடந்த, நகராட்சித் தேர்தல்கள் கொஞ்சம் அதிர்ச்சி வைத்தியம் புரிந்துள்ளன!

அந்தத் தொழு நோய்கள் நீடிக்குமா — இல்லை, உதய சூரியன் உதித்து நோய்களை விரட்டியடிக்குமா என்பதை காலம்தான் உணர்த்த வேண்டும்! ⁂

வெள்ளையர்...

[4—ம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வண்ணம், மத்திய ஆப்ரிக்கக் கூட்டாட்சி பல்வேறு சிரத்தைகள் கொண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலனி நாடாக இன்று விளங்குகின்றது. கூட்டாட்சியில் அங்கம் பெற்றிருக்கின்ற ஒவ்வொரு நாடும் இனப்பிரச்சினையில் சொந்தமாகச் சட்டம் செய்து கொள்ள அரசியல் சட்டபடி உரிமை பெற்றிருக்கின்றது. எல்லோரும் சமபங்காளர்களே என்ற கொள்கை வளர்ந்திருந்தாலும் ஐரோப்பியர்களின் ஆதிக்கம் குறைவில்லை.

பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் தன்னுடைய நிலைமைகளுக்குச் சாதகமாக ஒரு கூட்டாட்சியை நிறுவி விட்டு, சுதந்திரம் வழங்காமல் இருப்பது அங்குள்ள மக்களுக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது. கூட்டாட்சி மேலும் தொடர்ந்து நடைபெற 1960-ம் ஆண்டில் பரிசீலிக்கப்படும். கூட்டாட்சி தேவையில்லை என்ற கருத்துக்குச் செல்வாக்கு அதிகமிருப்பின் கூட்டாட்சி உடைந்து தனித் தனி நாடுகள் பின்னர் அமைய வாய்ப்புண்டு. ஏகாதிபத்யமும், வெள்ளை நிறத்தாரின் ஆதிக்கமும் நிலைத்து நிற்கவே கூட்டாட்சி துணை நிற்கிறதே தவிர ஒத்த சிரத்தைகள், வரலாற்று ஒருமைப்பாடுடையோர், ஒரே இனத்தினர் ஒன்று சேர்ந்து ஆளும் சிறப்பை மத்திய ஆப்ரிக்கக் கூட்டாட்சி உருவாக்கவில்லை. எனவே, சுதந்திரக் கிளர்ச்சி வலுவுற்று, பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் ஒழிந்தால் மீண்டும் மூன்று நாடுகளாய் தனித் தனியாக ஆட்சி நடத்துவதற்கான வழி நிச்சயம் அமையும் என எதிர்நோக்கலாம்.

இந்தியா கிழக்கிந்திய கம்பெனியால் பெரும் பகுதி உருவாகியதும், பின்னர் விக்டோரியா ராணியார் பிரிட்டிஷ் ஆட்சியை நேரடியாக நிலைநிறுத்தியதும் பல்வேறு இனங்கள் ஒடுக்கப்பட்டு, பல்வேறு முரண்பட்ட கலாச்சாரங்கள் பலவந்தப் பிணைப்பிலே சிக்குண்டு இன்றைய இந்தியா விளங்குவதும் நாம் நன்கறிந்ததே!

எகிப்தும், சூடானும் பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஆட்சியின் கீழ் ஒன்ருக ஆளப்பட்டு, ஒரே நிலையில் வைக்கப்பட்டிருந்தது என்பதற்காக விடுதலை பெற்றதும் தனித் தனி நாடுகளாய் இன்று விளங்குகின்றன.

இந்த முன்மாதிரிகள் மத்திய ஆப்ரிக்கக் கூட்டாட்சிக்கு வழி காட்டியாய் ஒளி காட்டி நின்று, சுதந்திரம் பெற்றதும் தனித் தனி மூன்று நாடுகளாய் நிச்சயம் பிரியும் என நாம் நம்பலாம். ⁂

விற்பனையாளர்களுக்கு அறிவிப்பு

'ரோமாபுரிப் பாண்டியன்' தொடர்கதை ஆரம்பமாகும் இதழிலிருந்து 'முரசொலி' அதிகப் பிரதிகள் தேவை என்று கேட்டு எழுதும் விற்பனையாளர்கள், தேவையான முன் பணமும் அனுப்ப வேண்டும். அப்படி முன்பணமின்றி வருகின்ற கடிதங்கள் நிச்சயம் கவனிக்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

— நிர்வாகி.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, முரசொலி அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு